**தரகம்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(இருபாலர்) முதல்வர்(மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ஆணை**

**பிறப்பிப்பவர்: முனைவர். ஸ்ரீ. பாலசுப்ரமணியன், எம்.எஸ்.சி.,பி.எட்.,எம்.பில்.,பிஎச்.டி.,**

**ந.க.எண்.1579/ஆ/2023 நாள்:09.07.2025**

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – நேரடி நியமனம் - இளநிலை உதவியாளர் - தொகுதி IV 2022-2023ஆம் ஆண்டிற்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டமை – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தரகம்பட்டி, கரூர் மாவட்டம், திரு.சா.ஜான்சன் சேவியர் ராஜ், இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை செய்து – ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1)சென்னை 15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.35681/பி1/2023, நாள்:23.11.2023.
2)இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.1579/ஆ/2023 நாள்:24.11.2023.
3)இவ்வலுவலக கடித ந.க.எண்.1579/ஆ/2023 நாள்:27.11.2023.
4)சென்னை 15, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.TNDCE/4777/2025-B1 நாள்:26.06.2025

-----

பார்வை(1)-இல் காணும் சென்னை-15, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, இக்கல்லூரியின் காலிப்பணியிடமாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு திரு.சா.ஜான்சன் சேவியர் ராஜ் என்பாருக்கு பணிநியமனம் செய்ய நியமன ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை(2)இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி, தனியர் காலிப்பணியிடமாக இருந்த இளநிலை உதவியாளர் பணியில் சேருவதற்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது, பார்வை(3)இல் காணும் இவ்வலுவலக் கடிதத்தின்படி, தனியர் 27.11.2023 மு.ப. பணியில் சேர்ந்தார்.

பார்வை(4)-இல் காணும் சென்னை-15, கல்லூரிக்கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, இத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்டு பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள் / சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் (நிலை-II) ஆகியோருக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 10-இன் கீழ் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் / கல்லூரி முதல்வர்களே நியமன அதிகாரி என்பதால் இணை இயக்குநர்கள் / கல்லூரி முதல்வர்கள் அளவிலேயே சார்ந்த பணியாளர்களுக்கு உரிய நேரத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க அறிவுறுத்தப்பட்டது.

(த.பி.பா)

அதன்படி, இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.சா.ஜான்சன் சேவியர் ராஜ் என்பாருக்கு பணியில் சேர்ந்த நாளான 27.11.2023 மு.ப. முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி இளநிலை உதவியாளர் பணியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணியில் ஈராண்டு தகுதிகாண் பருவ காலத்தில் கீழ்க்கண்ட தேர்வு மற்றும் பயிற்சியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

1. தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி
2. பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சி

முதல்வர் (மு. கூ. பொ)
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
தரகம்பட்டி - 621 311, கரூர் மாவட்டம்.

பெறுதல்
திரு.சா.ஜான்சன் சேவியர் ராஜ்,
இளநிலை உதவியாளர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(இருபாலர்),
தரகம்பட்டி, கரூர் மாவட்டம்

நகல்:

1) கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்கள்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சைதாப்பேட்டை, சென்னை -15(தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது)
2) பணிப்பதிவேடு
3) பட்டியல் பிரிவு
4) உ.பரி-2.